# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 55 | International Editor : MICHAEL. W. SMITH | இதழ் - 55


## தீர்க்கதரிசிகளின் அழைப்பு

*"நான் என் ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளை எல்லாரையும் உங்களிடத்தில் அனுப்பி: ஒவ்வொருவனும் தன் துன்மார்க்கமான வழியை விட்டுத் திரும்பி, தங்கள் நடக்கைகளைச் சீர்செய்யுங்கள் என்று சொல்லச்செய்தேன்..."* – எரேமியா 35 : 15

இஸ்ரவேலின் வரலாற்றின் ஆரம்ப நாட்களிலிருந்தே, தேவன் தமது வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிக்க மனிதர்களை எழுப்பினார்.அது தேவனிடமிருந்தே தோன்றியது.

தீர்க்கதரிசிகள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. சிலர் அரசரின் அரண்மனையிலிருந்து வந்தவர்கள்; சிலர் விவசாயிகள், மேய்ப்பர்கள், அல்லது உழைப்பாளர்கள். சிலர் கல்வியறிவு பெற்றவர்கள்;



அவர்களுடைய தன்மைகள் மாறுபட்டன – சிலர் மென்மையும் கண்ணீரும் கொண்டவர்கள்; சிலர் தைரியமும் தீவிரமும் உடையவர்கள்; இன்னும் சிலர் அமைதியும் நிலைத்திருப்பும் கொண்டவர்கள். வேறுபாடுகள் இருந்தபோதிலும், உண்மை ஒன்றே: **தேவன் அவர்களை அழைத்தார்.** தமது பாரத்தை அவர்களின் இருதயங்களில் வைத்தார். அவர்களின் செய்தி பலமுறை எதிர்ப்பைச் சந்தித்தது. அவர்கள் விக்கிரகாராதனை, கலகம் நிறைந்த காலங்களில் பேசினர். மக்கள் இனிமையான வார்த்தைகளை விரும்பிய போது, அவர்கள் நியாயத்தீர்ப்பை எச்சரித்தார்கள். மனந்திரும்புமாறு அழைத்தார்கள். பாவத்தின் பக்கம் சாய்ந்திருந்த தேசத்தை நீதியின் பக்கம் திரும்ப அழைத்தார்கள்.

நம்பிக்கை இழந்ததுபோல் தோன்றிய காலங்களில் கூட, அவர்கள் நம்பிக்கையை அளித்தார்கள்; தேவன் தமது உடன்படிக்கையை மறக்கவில்லை என்பதை விசுவாசிகளுக்கு நினைவூட்டினார்கள்.

பல தீர்க்கதரிசிகள் அவமதிக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, பழிக்கப்பட்டு, தனிமை, துன்புறுத்தல், மேலும் கீழ்ப்படிதலின் காரணமாக மரணம்கூட அனுபவித்தார்கள். இருந்தாலும், தங்களை அனுப்பிய ஒருவருக்கு அவர்கள் விசுவாசமாக இருந்தார்கள்.இந்த தீர்க்கதரிசிகள்–தனித்துவமுடையவர்கள், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர்கள், அடிக்கடி நிராகரிக்கப்பட்டவர்கள் மனிதர்களே–அவர்கள் பயம், சோர்வு, மனச்சோர்வு, ஆழ்ந்த போராட்டங்களையும் அனுபவித்தார்கள். சிலர் தயங்கினார்கள்; சிலர் தங்களைத் தகுதியற்றவர்களென உணர்ந்தார்கள்;

அவர்கள் குறையற்றவர்களாக இருந்ததினால் அல்ல–அவர்கள் மனமுவந்தவர்களாக இருந்ததினால். அவர்களுடைய பலவீனத்தில் தேவனுடைய வல்லமை பரிபூரணமாயிற்று; தீர்க்கதரிசிகளின் அழைப்பு பழைய ஏற்பாட்டோடு முடிவடையவில்லை. இன்றும் தேவன் தமது சத்தத்தைக் கேட்டு, தமது சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, தாழ்மையுடனும் தைரியத்துடனும் தமது சத்தியத்தைப் பேசும் ஆண்களையும் பெண்களையும் தேடிக்கொண்டிருக்கிறார்.

அந்தக் கேள்வி இன்னமும் அத்தியாவசியமானதே: *"நான் யாரை அனுப்புவேன்? நமக்காக யார் போவார்?"* ஏசாயாவின் பதில் நமது பதிலாகவும் ஒலிக்கட்டும்: "**இதோ, நான் இருக்கிறேன்; என்னை அனுப்பும்.**" ■

"இன்றும் தேவன் தமது சத்தத்தைக் கேட்டு, தமது சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, தாழ்மையுடனும் தைரியத்துடனும் தமது சத்தியத்தைப் பேசும் ஆண்களையும் பெண்களையும் தேடிக்கொண்டே இருக்கிறார் "


| தீர்க்கதரிசிகளின் அழைப்பு | தீர்க்கதரிசிகளின் காலம் | ஏசாயா<br>3<br>செப்பனியா, ஆபகூக் எரேமியா | எசேக்கியேல், தானியேல் | மீகா |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4-5 | 6-7 | 8 |

# தீர்க்கதரிசிகளும் அவர்களின் காலங்களும்

வேதாகமத்தின் தீர்க்கதரிசி நூல்கள் காலவரிசைப்படி அமைக்கப்படவில்லை; ஆகையால் இஸ்ரவேலின் வரலாற்றில் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் எங்கு பொருந்துகிறார் என்பதை அறிதல் கடினமாக இருக்கலாம். இந்த அட்டவணை, தீர்க்கதரிசிகள் தங்கள் ஊழியத்தை மேற்கொண்ட காலங்களை பாபிலோன் சிறைபிடிப்பிற்கு முன்பு (சிறைபிடிப்புக்கு முன்), சிறைபிடிப்பின் காலத்தில் (சிறைபிடிப்பு), மற்றும் யூதாவிற்கு திரும்பிய பின்பு (சிறைபிடிப்புக்குப் பின்) என்பவையாக எளிமையாகக் காட்டுகிறது. தீர்க்கதரிசிகளின் வரலாற்றில் அவர்களுக்குள்ள முக்கிய இடத்தில் எலியாவும் எலிசாவும் இதில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், தங்கள் ஊழியங்கள் முக்கியமானவையாக இருந்தும், அவர்களுடைய எழுத்துக்கள் தீர்க்கதரிசி நூல்களாக பாதுகாக்கப்படாத பிற தீர்க்கதரிசிகளையும் வேதாகமம் குறிப்பிடுகிறது.

| பெயர் | காலங்கள் (கிமு) | இடம் | சகாப்தம் |
|---|---|---|---|
| எலியா | 875 - 848 | இஸ்ரவேல் ( வடக்கு இராஜ்யம்) | சிறைபிடிப்புக்கு முன் |
| எலிசா | 848-800 | இஸ்ரவேல் ( வடக்கு இராஜ்யம்) | சிறைபிடிப்புக்கு முன் |
| யோவேல் | 9 - 5 வது நூற்றாண்டு (நிச்சயமற்றது) | யூதா | சிறைபிடிப்புக்கு முன் |
| ஆமோஸ் | 760 | இஸ்ரவேல் ( யூதாவிலிருந்து) | சிறைபிடிப்புக்கு முன் |
| ஓசியா | 755-715 | இஸ்ரவேல் ( வடக்கு இராஜ்யம்) | சிறைபிடிப்புக்கு முன் |
| ஏசாயா | 740-686 | யூதா ( எருசலேம்) | சிறைபிடிப்புக்கு முன் |
| மீகா | 740-687 | யூதா ( மோரியா) | சிறைபிடிப்புக்கு முன் |
| நாகூம் | 663-612 | யூதா | சிறைபிடிப்புக்கு முன் |
| செப்பனியா | 640-621 | யூதா | சிறைபிடிப்புக்கு முன் |
| ஆபகூக் | 612-600 | யூதா | சிறைபிடிப்புக்கு முன் |
| ஒபதியா | 586 | யூதா | சிறைபிடிப்பு( ஆரம்பம்) |
| எரேமியா | 626-586 | யூதா (ஆனதோத்/ எருசலேம்) | சிறைபிடிப்புக்கு முன் - சிறைபிடிப்பு வரை |
| புலம்பல் (எரேமியா) | 586 | யூதா | சிறைபிடிப்பு |
| எசேக்கியேல் | 593-571 | பாபிலோன்(கேபார் நதி) | சிறைபிடிப்பு |
| தானியேல் | 605-536 | பாபிலோன் -பெர்சியா | சிறைபிடிப்பு |
| ஆகாய் | 520 | யூதா | சிறைபிடிப்புக்கு பின் |
| சகரியா | 520-518 | யூதா | சிறைபிடிப்புக்கு பின் |
| மல்கியா | 450-430 | யூதா | சிறைபிடிப்புக்கு பின் |

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,**
**கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள்

**பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், நெருக்கடியும் வீழ்ச்சியும் நிறைந்த காலங்களில் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதற்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் தீர்ப்பை எச்சரித்தார்கள், ஜனங்களை நீதிக்குத் திருப்ப அழைத்தார்கள், மேலும் மறுசீரமைப்பின் நம்பிக்கையை அளித்தார்கள். ஜனங்களை மீண்டும் தேவனிடத்தில் இழுத்துவர அவர்கள் வழிநடத்தியும் ஊக்கமளித்தும் செயல்பட்டார்கள். தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையும் செய்திகளும், தேவனுடைய பரிசுத்தம், இரக்கம், நியாயத் தீர்ப்பு, மற்றும் விசுவாசத்தன்மை ஆகியவற்றை எப்போதும் நமக்கு நினைவூட்டுகின்றன.**

## ஏசாயா

### மேசியாவை அறிவித்த தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. சுமார் 740-686

**பணி** : தீர்க்கதரிசி

**இடம்** : எருசலேம்; யூதா

**புத்தகம்** : ஏசாயா

**கருத்துக்கள்** : பரிசுத்தம், தீர்ப்பு, மனந்திரும்புதல், மறுசீரமைப்பு, வரவிருக்கும் மேசியா

ஏசாயா என்ற பெயர் (அர்த்தம் "*கர்த்தரே இரட்சிப்பு*") அவருடைய ஊழியத்தின் மையச் செய்தியை வெளிப்படுத்துகிறது. "உசியா ராஜா மரணமடைந்த அதே ஆண்டிலே ," ஆலயத்தில் கர்த்தருடைய தரிசனத்தை கண்டபோது (ஏசாயா 6:1-8), ஏசாயாவுக்குத் தீர்க்கதரிசன ஊழியத்திற்கான அழைப்பு வந்தது. அவர் எருசலேமில் வசித்து, யூதாவாகிய தென் ராஜ்யத்திற்கு தீர்க்கதரிசனம் உரைத்தார்; அந்த ராஜ்யம் யூதா மற்றும் பென்யமின் கோத்திரங்களை உள்ளடக்கியது. வடக்கு ராஜ்யமான இஸ்ரவேல் மிகுந்த விக்கிரகாராதனையில் மூழ்கி, இறுதியில் கி.மு. 722-ல் அசீரியரால் வீழ்த்தப்பட்டது.

ஏசாயா, உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய ராஜாக்களின் ஆட்சிக் காலங்களில் ஊழியம் செய்தார் (ஏசாயா 1 : 1). அவர் எருசலேமில் வாழ்ந்து, ராஜ்யங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததினால், ராஜா அரண்மனைக்கு ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது; ஆனால் அதைப் பற்றி வேதாகமம் விரிவாகக் கூறவில்லை.

ஏசாயா திருமணமானவர்; அவருக்கு குறைந்தது இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களின் பெயர்களே தீர்க்கதரிசன அர்த்தம் கொண்டவை: ஷெயார்-யாஷூப் ("*ஒரு மீதம் திரும்பும்* ") மற்றும் மகேர்-ஷலால்-ஹாஷ்-பாஸ் ("*கொள்ளையை வேகமாகப் பறி, இரையை விரைந்து எடு*"). இவை தேசத்திற்கான அடையாளங்களாகவும், தேவன் அவருக்குக் கொடுத்த செய்தியின் பிரதிபலிப்பாகவும் இருந்தன (ஏசாயா 7 : 3; 8 : 1-4).

ஏசாயா யூதாவின் பாவங்களை கண்டித்தார்; வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரித்தார். அசீரியா வலிமையடைந்த காலத்தில் — குறிப்பாக எகிப்து தேசத்துடன் நட்புகொள்ள — தேசம் முயன்றது. ஆனால் எந்த தேசமும் அவர்களை இரட்சிக்க முடியாது; கர்த்தரை நம்புவதே ஒரே பாதுகாப்பு என ஏசாயா நினைவூட்டினார் (ஏசாயா 31 : 1). ஒருநாள் யூதா பாபிலோனுக்குக் அடிமையாக அழைத்துச் செல்லப்படும் என்றும் அவர் முன்னறிவித்தார் (ஏசாயா 39 : 6-7); அந்தத் தீர்க்கதரிசனம், ஏசாயாவின் மரணத்திற்கு நூற்றாண்டுக்கு மேல் கடந்தபின் நிறைவேறியது.ஏசாயா பாவமும் நியாத்தீர்ப்பும் குறித்து வலிமையாகப் பேசினாலும், மேசியாவைச் சார்ந்த வேதாகமத்தின் மிகத் தெளிவான தீர்க்கதரிசனங்களில் சிலவற்றையும் தேவன் அவர்மூலம் அறிவித்தார். கன்னிகையின் பிறப்பு (ஏசாயா 7 : 14), என்றென்றும் ஆட்சி செய்யும் தெய்வீக ராஜா (ஏசாயா 9 : 6-7), தாவீதின் வீட்டிலிருந்து எழும் நீதியான கிளை (ஏசாயா 11 : 1-10), கர்த்தருடைய வழியை ஆயத்தம் செய்யும் முன்னோடியாக இருப்பவன் (ஏசாயா 40:3-5), மேலும் நமது குற்றங்களுக்காக காயப்படுத்தப்படும் துக்கங்களின் மனிதன் ஆகிய மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர் அறிவித்தார்.

அவர் அநேகருடைய பாவங்களைச் சுமப்பார் (ஏசாயா 53). இத்தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் தெளிவாக இயேசு கிறிஸ்துவின் வருகையையே சுட்டிக்காட்டுகின்றன. ஏசாயா எவ்வாறு மரணமடைந்தார் என்பதைக் குறித்து வேதாகமம் பதிவு செய்யவில்லை. பழைய யூத மற்றும் கிறிஸ்தவ மரபுகளின்படி, மனாசே ராஜாவினுடைய ஆட்சிக் காலத்தில், தொண்ணூறு வயதில் அவர் இரத்த சாட்சியாக, இரண்டாக அறுக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது — சிலர் இதை எபிரேயர் 11 : 37-ல் காணப்படும் குறிப்புடன் தொடர்புபடுத்துகிறார்கள். தேவனுடைய செய்தியில் சமரசம் செய்ய மறுத்த தீர்க்கதரிசிகள் எதிர்கொண்ட ஆபத்தை இது வெளிப்படுத்துகிறது.

ஏசாயா யூதாவின் உண்மையான ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்தினாலும், அதே நேரத்தில் நம்பிக்கையின் நற்செய்தியையும் எடுத்துச்சென்றார். அவர் ஜனங்களுக்கு தேவனுடைய பரிசுத்தத்தை நினைவூட்டினார். உயர்ந்த மொழிநடையும் வலிமையான கவிதை பாணியும் கொண்ட அவரது எழுத்துக்கள், பழைய ஏற்பாட்டில் மேசியாவைப் பற்றிய மிகத் தெளிவான சித்திரங்களில் ஒன்றை வழங்குகின்றன. புதிய ஏற்பாட்டில் அதிகமாக மேற்கோள் காட்டப்படும் தீர்க்கதரிசி இவரே. ■

# செப்பனியா

## கர்த்தருடைய நாளின் தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. சுமார் 640-621

**பணி** : தீர்க்கதரிசி

**இடம்** : யூதா; முக்கியமாக எருசலேம்

**புத்தகம்** : செப்பனியா

**கருத்துக்கள்** : கர்த்தருடைய நாள், பாவத்தின்மேல் நியாயத்தீர்ப்பு, தேவனுடைய பரிசுத்தம், மனந்திரும்புதல், மீட்பு, சுத்திகரிக்கப்படுதல்

செப்பனியா என்ற பெயர் ("*கர்த்தரால் மறைக்கப்பட்டவன்*") என்பதைக் குறிக்கும். அவர் யோசியா ராஜாவினுடைய ஆட்சிக் காலத்தில் யூதாவில் ஊழியம் செய்தார் (செப்பனியா 1 : 1); அவரது வம்சாவளி "*எசேக்கியா*" வரை நான்கு தலைமுறைகள் பின்செல்லுகிறது; பல அறிஞர்கள் இது ராஜாவாகிய எசேக்கியாவையே குறிக்கும் என நம்புகின்றனர். இது உண்மையானால் — செப்பனியா ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர் ஒரு தீர்க்கதரிசிக்கு அபூர்வமான பின்னணி — ஆகையால் யூதாவை தேவனிடத்தில் திரும்ப அழைக்கும் போது அவரது செய்தி விசேஷ அதிகாரம் கொண்டதாக இருந்தது.

செப்பனியா பேசத் தொடங்கியபோது, யூதா ஆவிக்குரிய வழிதவறலில் மற்றும் மிகுந்த வஞ்சனையில் மூழ்கியிருந்தது. விக்கிரகாராதனை பரவலாக இருந்தது; வன்முறையும் அநியாயமும் சாதாரணமானதாகி, பலர் தங்கள் பாவத்தில் சுகமாக இருந்தார்கள். செப்பனியா தனது தீர்க்கதரிசனத்தைத் தெளிவான எச்சரிக்கையுடன் தொடங்கினார்: தேவனுடைய தீர்ப்பு நெருங்கி வந்து கொண்டிருந்தது. முழுப் புத்தகத்திலும் அவர்— "*கர்த்தருடைய நாள்*" பற்றி பேசுகிறார். அது தேவன் யூதாவிலும் சுற்றியுள்ள தேசங்களிலும் தீர்மானமாகச் செயல்படும் காலம் (செப் 1 : 14-18). பழைய ஏற்பாட்டில் காணப்படும் மிக வலிமையான தீர்ப்பு விளக்கங்களில் சில, மக்களை ஆவிக்குரிய அலட்சியத்திலிருந்து எழுப்புவதற்காக இங்கு இடம் பெற்றுள்ளன.

ஆனால் செப்பனியாவின் செய்தி தீர்ப்பை மட்டுமே கொண்டதல்ல. அவர் யூதாவை கர்த்தரைத் தேடுமாறு, நீதியையும் தாழ்மையையும் நாடுமாறு அழைத்தார்; கர்த்தரை நம்புகிற ஒரு மீதத்தை தேவன் காக்கப்போகிறார் என வாக்குத்தத்தம் செய்தார் (செப்பனியா 2:3).

பெலிஸ்தியா, மோவாப், அம்மோன், கூஷ், அசீரியா ஆகிய சுற்றியுள்ள—தேசங்களின் மேல் நியாயத்தீர்ப்பையும் அவர் அறிவித்தார்.தேவன் எல்லா — ஜாதிகளின்மேலும் ஆட்சி செய்கிறார் என்பதை நினைவூட்டினார்.

புத்தகம் நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்புக்கு மாறுவதோடு முடிவடைகிறது. தேவன் தமது ஜனங்களைச் சுத்திகரித்து, அவர்களுடைய பயத்தையும் அவமானத்தையும் நீக்கி, மீண்டும் அவர்களைச் சேர்ப்பார் என செப்பனியா முன்னறிவித்தார். பழைய ஏற்பாட்டின் அதிசயமான வாக்குத்தத்தங்களில் ஒன்று இங்கே காணப்படுகிறது: "**உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்** "(செப்பனியா 3:17).

செப்பனியாவின் மரணத்தைப் பற்றி வேதாகமம் எதையும் பதிவு செய்யவில்லை; அவரது வம்சாவளியைத் தவிர, அவரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்த தகவல்கள் குறைவு. இருப்பினும், பாபிலோன் வருவதற்கு முன் யூதாவுக்குக் கொடுக்கப்பட்ட கடைசி அழைப்புகளில் ஒன்றாக அவரது செய்தி நிற்கிறது.

தேவனுடைய பரிசுத்தத்தை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், தாழ்மையுடன் மனந்திரும்புகிற அனைவருக்கும் அவரது இரக்கம் அநாதியாய் இருக்கிறது என்றும் செப்பனியா நமக்கு நினைவூட்டுகிறார். ■

# ஆபகூக்

## கேள்வி எழுப்பும் தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. 612-600 (சுமார்)

**பணி** : தீர்க்கதரிசி

**இடம்** : யூதா

**புத்தகம்** : ஆபகூக்

**கருத்துக்கள்** : தேவனுடைய நீதியும், கேள்வியும் விசுவாசமும், துன்மார்க்கரின் தீர்ப்பு, விசுவாசத்தினால் வாழ்தல், தேவனுடைய அரசாட்சி

ஆபகூக் (அர்த்தம்: "*அணைத்துக் கொள்பவன்* ") பாபிலோனியர் யூதாவின்மேல் படையெடுக்கும் காலத்துக்கு முன்பாக, யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் யூதாவில் வாழ்ந்தான். எரேமியாவின் காலத்திலேயே எழுதப்பட்ட அவனுடைய நூல், தீர்க்கதரிசிகளின் நூல்களுக்குள் தனித்துவமானது;

ஏனெனில் அது ஜனங்களுக்கு உரைக்கப்பட்ட பிரசங்கமல்ல, தேவனோடு நடந்த ஒரு உரையாடலைக் குறித்ததாகும். அதனாலேயே அவன் " *கேள்வி எழுப்பும் தீர்க்கதரிசி* " என நினைவு கூறப்படுகிறான்.அவன் தன் தேசத்தில் நிலவிய அக்கிரமம், அநியாயம், ஆவிக்குரிய சிதைவு ஆகியவற்றைப் பார்த்து, தன் கவலைகளை நேரடியாக கர்த்தருக்குச் சமர்ப்பித்தான் (ஆபகூக் 1 : 2-4).

தேவனுடைய பதில் எதிர்பாராததாக இருந்தது. யூதாவைத் தண்டிக்க பாபிலோனை எழுப்புவேன் என்று அவர் வெளிப்படுத்தினார் (ஆபகூக் 1 : 6). இது ஆபக்கூக்கின் உள்ளத்தில் இன்னொரு கேள்வியை எழுப்பியது — யூதாவைவிட அதிகமாகச் சீர்கெட்ட ஜாதியை தேவன் எவ்வாறு பயன்படுத்துவார்? ஆனால் கர்த்தர், எல்லா ஜாதிகளின்மேலும் தாம் ஆட்சி செய்கிறவர் என்றும், யூதாவிலோ பாபிலோனிலோ செய்யப்பட்ட பாவம் தமது நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பாது என்றும் அவனுக்கு நினைவூட்டினார்.இந்தச் சூழ்நிலையில்தான் அடிப்படைச் சத்தியம் வெளிப்படுகிறது: "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் " (ஆபகூக் 2 : 4).

இந்த வசனம் பிற்காலத்தில் புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டப்படுகிறது.நூல் இறுதியில், ஒரு ஜெபமாகவும் விசுவாச அறிக்கையாகவும் முடிகிறது.

ஆபகூக் கேள்விகளுடன் தொடங்கி, உறுதியான நம்பிக்கையுடன் முடிக்கிறான்: " நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்."(ஆபகூக் 3:18).
அவனுடைய இறுதி வார்த்தைகள், விசுவாசம் சூழ்நிலைகளில் சார்ந்ததல்ல; மாறாத தேவனை சார்ந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. ஆபகூக் என்ற பெயரின் அர்த்தமே அவனுடைய தீர்க்கதரிசனத்தைப் பிரதிபலிக்கிறது. தேவனைத் தழுவிக்கொண்டு, அவர் வழிகளைப் புரியாத போதும் ஜெபத்திலும் விசுவாசத்திலும் நிலைத்திருந்தான். வேதாகமம் ஆபகூக்கின் மரணத்தைப் பற்றி பதிவு செய்யவில்லை; அவன் வாழ்க்கையைப் பற்றியும் அதிகம் தெரியாது.

ஆனாலும் இன்று—விசுவாசிகள் எதிர்கொள்ளும் கேள்விகளை அவனும் எதிர்கொண்டான்.தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார்? அவரது நீதி எவ்வாறு செயல்படுகிறது? நிச்சயமற்ற காலங்களில் விசுவாசம் எவ்வாறு நிலைத்திருக்கும்?
கடினமான கேள்விகளை எழுப்புவது அவிசுவாசமல்ல; அது தேவனை இன்னும் ஆழமாக நம்புவதற்கான ஒரு பாதை என்பதை ஆபகூக் நமக்குக் கற்றுக்கொடுக்கிறான்.

# எரேமியா

## அழுகையின் தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. 626-586 (சுமார்)

**பணி** : தீர்க்கதரிசி மற்றும் ஆசாரியன்

**இடம்** : ஆனதோத் மற்றும் எருசலேம்; யூதா

**புத்தகம்** : எரேமியா; புலம்பல்கள் (பாரம்பரியமாக)

**கருத்துக்கள்** : நியாயத்தீர்ப்பு, மனந்திரும்புதல், உடன்படிக்கை விசுவாசம், யூதாவின் வீழ்ச்சி, மீட்பு மற்றும் நம்பிக்கை

எரேமியா (அர்த்தம் " *கர்த்தர் நியமிக்கிறார் / உயர்த்துகிறார் / தூக்கி எடுக்கிறார்* ") ஆனாதோத் என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஆசாரியனான இல்க்கியாவின் குமாரன் (எரேமியா 1 : 1). அவனுடைய அழைப்பு யோசியா ராஜாவின் பதின்மூன்றாம் ஆண்டில், சுமார் கி.மு. 627-இல் ஏற்பட்டது. அப்போது கர்த்தர் அவனிடம்,நான் உன்னை கர்ப்பத்தில் உருவாக்குவதற்கு முன்பே உன்னை அறிந்தேன். "உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார் " (எரேமியா 1 : 5). எரேமியா மிக இளம் வயதில் அழைக்கப்பட்டான்; அவன் சொன்ன வார்த்தைகளே அதைக் காட்டுகின்றன:
" நான் ஒரு பிள்ளை " (எரேமியா 1 : 6). அவன் ஊழியம், ஏசாயாவின் ஊழியம் முடிந்ததிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்திலேயே தொடங்கியது. யூதா, முன்பு கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை அசட்டையாக எடுத்துக்கொண்டது; தேசம் அதன் இறுதி வீழ்ச்சிக்கருகில் இருந்தது.

எரேமியா, யூதாவின் கடைசி ஆண்டுகள் முழுவதும் தேவனுடைய செய்தியைச் சுமந்தான். யோசியா, யோயாகாஸ், யோயாக்கீம், யெகோனியா, செதேக்கியா ஆகிய ராஜாக்களின் ஆட்சிக்காலங்களில் அவன் ஊழியம் செய்தான்; இறுதியில் கி.மு. 586-இல் எருசலேம் வீழ்ந்தது. அவனுடைய ஊழியம் சுமார் நாற்பது ஆண்டுகள் நீடித்தது.யூதாவின் பாவங்களையும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பையும் குறித்து அவன் சுமந்த ஆழ்ந்த துக்கத்தின் காரணமாக, எரேமியா " *அழுகையின் தீர்க்கதரிசி* " என்று அடிக்கடி அழைக்கப்படுகிறான். பல வரலாற்றாசிரியர்கள் அவனை உணர்ச்சிவசப்பட்டவனாகவும் மிகுந்த செம்மையானவனாக விவரிக்கிறார்கள்.

தேவன் அவனுக்குக் கொடுத்த செய்தியின் பாரம் காரணமாக அவன் பல நேரங்களில் மனச்சோர்வடைந்த வனாகத் தோன்றினாலும் கர்த்தருடைய அழைப்பிற்கு அவன் கீழ்ப்படியும் விசுவாசியானவனாகவே இருந்தான்.
பாபிலோன் எருசலேமைக் கைப்பற்றும் என்று ஜனங்களுக்கு எச்சரிக்க தேவன் அவனை அனுப்பினார்;

ஏனெனில் ஜனங்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி, விக்கிரகாராதனையில் விழுந்திருந்தார்கள். எரேமியா மனந்திரும்பும்படி கண்ணீருடன் வேண்டினான்; ஆனால் அவனுடைய செய்தி மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டது. பொய்த் தீர்க்கதரிசிகள் அவனை எதிர்த்து நின்று, சமாதானமே வரும் என்று பொய்யாக வாக்குறுதி அளித்தார்கள் (எரேமியா 6:14).தேவன் யூதாவை நேபுகாத்நேசரின் கையிலே ஒப்புக்கொடுத்துள்ளார் என்பதால் பாபிலோனை எதிர்த்து நிற்க வேண்டாம் என்று எரேமியா சொன்னபோது, அவனைத் துரோகி என்று குற்றம் சாட்டினார்கள்.

கர்த்தர் அவனுக்குக் கொடுத்த செய்திக்காக எரேமியா மிகுந்த துன்பங்களை அனுபவித்தான். அவன் அடிக்கப்பட்டான், கைது செய்யப்பட்டான், சேற்றில் மூழ்கும்படியாக ஒரு கிணற்றில் வீசப்பட்டான் (எரேமியா 38:6). யோயாக்கீம் ராஜா, எரேமியா எழுதிவைத்த தீர்க்கதரிசனத்தை துண்டு துண்டாக வெட்டி எரித்தான் (எரேமியா 36).எருசலேம் வீழ்ந்தபின், தேசத்தில் மீதமிருந்த சிலருடன் எரேமியா தங்கினான். போக வேண்டாம் என்று அவன் எச்சரித்திருந்த போதிலும் அவர்கள் அவனை எகிப்துக்குக் கொண்டு செல்லக் கட்டாயப்படுத்தினார்கள்; (எரேமியா 42 :43). அவனுடைய மரணத்தைப் பற்றி வேதாகமம் எதையும் பதிவு செய்யவில்லை; ஆனால் பிற்கால பாரம்பரியத்தின்படி, அவன் எகிப்தில் கல்லெறிந்து கொல்லப்பட்டான் என்று கூறப்படுகிறது.

இத்தனைத் துன்பங்களின் நடுவிலும், தேவன் எரேமியாவுக்கு நம்பிக்கையின் செய்தியைக் கொடுத்தார். அவர் தமது ஜனங்களுடன் ஒரு புதிய உடன்படிக்கை செய்வார் என்றும், தமது சட்டத்தை அவர்கள் இருதயங்களில் எழுதுவார் என்றும் முன்கூட்டியே அறிவித்தார் (எரேமியா 31:31-34). எருசலேமின் அழிவைக் காண எரேமியா உயிரோடு இருந்தாலும், தேவன் மீண்டும் தமது ஜனங்களை மீட்டெடுப்பார் என்றும் அவன் அறிவித்தான்.
எரேமியாவின் ஊழியம் அதன் நேர்மை, இரக்கம், பொறுமை ஆகியவற்றால் தனித்துவமாக விளங்குகிறது. அவன் யூதாவின் பாவத்தை வெளிப்படுத்தினான், வரவிருக்கும் தீர்ப்பை எச்சரித்தான், அதே சமயத்தில் தேவனுடைய இரக்கத்தையும், கிறிஸ்துவில் ஒருநாள் நிறைவேறும் புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தையும் சுட்டிக்காட்டினான்.

# எசேக்கியேல்

## ஜாமக்கார தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. 593-571 (சுமார்)
**பணி** : தீர்க்கதரிசி மற்றும் ஆசாரியன்
**இடம்** : பாபிலோனில் அகதியாக; கேபார் நதிக்கரையில் இருந்த சிறைபிடிக்கப்பட்டவர்களிடையே
**புத்தகம்** : எசேக்கியேல்
**கருத்துக்கள்** : தேவனுடைய மகிமை, யூதாவின் மேல் தீர்ப்பு, ஜாதிகளின் மேல் தீர்ப்பு, தனிப்பட்ட பொறுப்பு, மீட்பு, புதிய இருதயம் மற்றும் ஆவி

எசேக்கியேல் (அர்த்தம்: "*தேவனுடைய பலம்*") ஆசாரியனும் பூசியின் குமாரனுமாயிருந்தான். கி.மு. 597-இல் நடந்த இரண்டாவது சிறைப்பிடிப்பின்போது, எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டான் (எசேக்கியேல் 1 : 1-3). எருசலேமின் இறுதி அழிவுக்கு முன்பே அவன் அடிமையாகக் கொண்டு செல்லப்பட்டான்; கேபார் நதிக்கரையில் வாழ்ந்த சிறைபிடிக்கப்பட்டவர்களிடையே அவனுடைய ஊழியம் நடைபெற்றது.எருசலேமிலிருந்து தூரமாக இருந்தபோதிலும், ஏசாயா மற்றும் எரேமியா கொடுத்த எச்சரிக்கைகளுக்குப் பிறகும் தங்கள் பாவத்தின் தீவிரத்தையும் சிறைப்பிடிப்பின் நோக்கத்தையும் இன்னும் புரிந்து கொள்ளாத யூத அடிமைகளிடம் பேச தேவன் அவனைப் பயன்படுத்தினார். எசேக்கியேலின் தீர்க்கதரிசி அழைப்பு, யோயாக்கீன் ராஜாவின் சிறைப்பிடிப்பின் ஐந்தாம் ஆண்டில், சுமார் கி.மு. 593-இல் ஏற்பட்டது (எசேக்கியேல் 1 : 2). கர்த்தருடைய மகிமையைப் பற்றிய அதிசயமான தரிசனங்களை அவன் கண்டான் அவை அவனுடைய முழு ஊழியத்தையும் வடிவமைத்தன."தேவன் அவனை இஸ்ரவேல் வீட்டிற்குக் காவலாளியாக நியமித்ததால்" (எசேக்கியேல் 3:17) எசேக்கியேல் "காவலாளி தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறான். அவனுடைய தீர்க்கதரிசனங்கள் தெளிவான அடையாளங்களும் ஆழமான அர்த்தங்களும் கொண்டவை என்பதால், அவனை தரிசனங்களின் தீர்க்கதரிசி என்றும், முழு ஊழியமும் பாபிலோனிலேயே நடைபெற்ற தினால் "சிறைப்பிடிப்பின் தீர்க்கதரிசி" என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.வரலாற்றாசிரியர்கள் எசேக்கியேலை உறுதியான மனதுடன், கட்டுப்பாடுள்ளவனாகவும், தேவனுக்கான ஆழ்ந்த பக்தியுடன் வாழ்ந்தவனாகவும் விவரிக்கிறார்கள்; அவனுடைய தரிசனங்கள் சில நேரங்களில் அதிசயமும் இரகசியமும் நிறைந்தவையாக இருந்தன.

எசேக்கியேல், கி.மு. 605-இல் முன்பே சிறைப்பிடிக்கப்பட்ட தானியேலுடன் ஒரே பொதுக் காலப்பகுதியில் ஊழியம் செய்தான். இருவரும் வேறுபட்ட சூழல்களில் பணியாற்றினார்கள்—தானியேல் ராஜ அரண்மனையில், எசேக்கியேல் அடிமைகளிடையே— ஆயினும், எசேக்கியேல் தானியேலை நீதிமானும் ஞானமுள்ளவனுமாகப் பெயரிட்டு குறிப்பிடுகிறான் (எசேக்கியேல் 14:14, 20; 28:3).
தன் ஆரம்ப ஊழியத்தில், ஜனங்கள் மனந்திரும்ப மறுத்ததால் எருசலேம் அழிக்கப்படும் என்று எசேக்கியேல் எச்சரித்தான். அவனுடைய செய்தி வல்லமையானதும் வெளிப்படையானதும் ஆக இருந்தது. வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை விளக்க தேவன் அவனை அடிக்கடி சிறு சிறு காரியங்களைச் செய்ய ஆணையிட்டார்.
இஸ்ரவேலும் யூதாவும் செய்த பாவத்தின் ஆண்டுகளைச் சித்தரிக்க, எசேக்கியேல் பல நாட்கள் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டான் (எசேக்கியேல் 4:4-6). முற்றுகையின் காலத்தில் ஜனங்கள் அனுபவிக்கவிருந்த அசுத்தத்தையும் பஞ்சத்தையும் காட்ட, மனுஷ கஷ்டத்தின் வறட்டிக்குப் பதிலாக உனக்கு மாட்டுச்சாணி வறட்டியைக் கட்டளையிடுகிறேன்; அதினால் உன் அப்பத்தை சுடுவாயாக என்றார். (எசேக்கியேல் 4:12-13). எருசலேமின் நிலையைச் சித்தரிக்க, எசேக்கியேல் தன் தலைமயிரையும் தாடியையும் சவரம் செய்து, அதை மூன்று பங்குகளாகப் பிரித்தான்— ஒருபகுதியை எரித்தான், ஒருபகுதியை வாளால் அடித்தான், மற்றொரு பகுதியை காற்றில் சிதறடித்தான் (எசேக்கியேல் 5:1-4). இந்தச் சின்னச் செயல்கள், சிறைப்பட்டவர்களைத் தங்கள் நிலையின் தீவிரத்தைக் குறித்து விழித்தெழச் செய்யவே நோக்கப்பட்டவை. கி.மு. 586-இல் எருசலேம் இறுதியாக வீழ்ந்தபோது, ஒரு அடிமை வந்து அந்தச் செய்தியை அறிவித்தான்;

இதனால் எசேக்கியேல் தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனம் அனைத்தும் உண்மையாக நிறைவேறியதென உறுதிப்படுத்தப்பட்டது (எசேக்கியேல் 33:21). அதன் பின்பு, அவனுடைய செய்தி தீர்ப்பிலிருந்து நம்பிக்கையின்பால் மாறியது. அவன் மீட்பு, புதிய இருதயம், புதிய ஆவி பற்றி பேசினான் (எசேக்கியேல் 36:26); மேலும் தேவன் ஒருநாள் தமது ஜனங்களை மீண்டும் திரட்டுவார் என்ற வாக்குத்தத்தத்தையும் அறிவித்தான்.
எசேக்கியேல் திருமணம் செய்திருந்தான்; அவன் மனைவியின் மரணம் ஜனங்களுக்கு ஒரு தீவிரமான அடையாளமாக மாறியது (எசேக்கியேல் 24:15-18). அவன் குடும்பத்தைப் பற்றி வேதாகமம் அதற்கு மேலான விவரங்களை வழங்கவில்லை.இஸ்ரவேலைச் சுற்றியிருந்த ஜாதிகளின்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் எசேக்கியேல் அறிவித்தான்; தேவன் தமது ஜனங்களுக்குச் செய்யப்போகிற காரியங்களை வெளிப்படுத்தும் தரிசனங்களையும் அவன் பெற்றான். உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு பற்றிய அவன் தரிசனம் (எசேக்கியேல் 37), மரணமே நிறைந்திருந்த இடத்தில் தேவன் உயிரையும் நம்பிக்கையையும் கொடுப்பதற்கான மிகத் தெளிவான காரியமாக விளங்குகிறது.எசேக்கியேலின் ஊழியத்தில் முக்கியமான கருப்பொருள் கர்த்தருடைய மகிமை ஆகும். இஸ்ரவேலின் பாவத்தினால் அந்த மகிமை ஆலயத்திலிருந்து விலகியதைக் கண்டான்; ஆனால் எதிர்காலத்தில் தேவனுடைய மகிமை மீண்டும் திரும்பிவரும் என்றும் அவன் கண்டான். எசேக்கியேல் எவ்வாறு மரித்தான் என்பதை வேதாகமம் பதிவு செய்யவில்லை.
யூத பாரம்பரியத்தின்படி, விக்கிரகாராதனையை கண்டித்ததற்காக அவன் சக அடிமைகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் நமக்கு தெரிந்த ஒன்று அவன் ஆழ்ந்த இருளின் காலத்திலும் தேவனுடைய அழைப்பிற்கு விசுவாசமாக நிலைத்திருந்தான். நியாயத்தீர்ப்பை உண்டாக்கிய பாவத்தை அவன் எதிர்த்தான்; அதே நேரத்தில் தேவன் தரும் மீட்பின் நம்பிக்கையையும் ஜனங்களுக்கு சுட்டிக்காட்டினான்.■

# தானியேல்

## கடைசிகால வெளிப்பாட்டு தீர்க்கதரிசி



**காலம்** : கி.மு. 605-536 (சுமார்)
**பணி** : தீர்க்கதரிசி மற்றும் அரசியல்வாதி
**இடம்** : எருசலேம்; பாபிலோன்
**புத்தகம்** : தானியேல்
**கருத்துக்கள்** : தேவனுடைய அரசாட்சி, சிறைப்பிடிப்பில் விசுவாசம், இராஜ்யங்களைப் பற்றிய தரிசனங்கள், கடைசிகால தீர்க்கதரிசனம், விடுதலை, வரவிருக்கும் மேசியா

தானியேல் (அர்த்தம்: "*தேவன் என் நியாயாதிபதி*") கி.மு. 605-இல் நடந்த முதல் சிறைப்பிடிப்பின்போது பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டான். அப்போது நேபுகாத்நேச்சார், யூதாவிலிருந்து "அழகும் திறமையும் ஞானமும் நிறைந்த இளைஞர்களை அழைத்துச் சென்றான் "(தானியேல் 1 : 3-4). ராஜாவின் கட்டளையின்படி ராஜ குலத்தினரையும் உயர் குடியினரையும் பாபிலோன் அரண்மனைக்கு அழைத்துவரப்பட்டனர் என்பதால், தானியேல் ஒரு ராஜ அல்லது உயர்குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்திருக்கலாம் என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.பாபிலோனில் அவன் வந்தபோது, தானியேல் இளம்வயதிலிருந்திருக்கலாம்; ஆனால் ராஜாவின் போஜனத்தால் தன்னை தீட்டுப்படுத்தக்கூடாது என்று தன் இருதயத்தில் தீர்மானித்தான் (தானியேல் 1 : 8). ஆரம்பத்திலிருந்தே தானியேல் தேவனுக்கான தன் பக்தியில் உறுதியாக நிலைத்திருந்தான். நேபுகாத்நேச்சார், பெல்தெஷாத்சார், மேதியனான தரியு, கோரேசு ஆகிய பல ராஜாக்களின் கீழ்—தானியேல் சேவை செய்தான்; பாபிலோனிய மற்றும் ஆரம்ப பாரசீக பேரரசுகளின் முழு காலத்திலும் தேவன் அவனை தலைமைப் பதவிகளில் பயன்படுத்தினார்.
புறஜாதி தேசத்தில் வாழ்ந்த காலத்திலுள்ள மாற்றங்களும் அழுத்தங்களும் மத்தியில் கூட, தானியேல் தேவனுடனான தன் நேர்மையை காத்துக்கொண்டான். அவன் இடைவிடாது ஜெபித்தான், தேவனுடைய ஞானத்தை நாடினான், மரண அபாயம் இருந்தபோதிலும் சமரசம் செய்ய மறுத்தான். தரியு ராஜாவின் ஆட்சிக்காலத்தில், தேவனிடத்தில் ஜெபிப்பதைத் தொடர்ந்ததற்காக தானியேல் சிங்கங்களின் குகையில் வீசப்பட்டான்; ஆனால் கர்த்தர் அவனை விடுவித்தார் (தானியேல் 6).தானியேல், வரவிருக்கும் ராஜ்யங்கள், ஜாதிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும், கிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்தின் வெளிப்பாடும் அவனுக்குக் வெளிப்படுத்தப்பட்டன. நேபுகாத்நேச்சாரின் சொப்பனங்களுக்கான அவனுடைய விளக்கங்கள் (தானியேல் 2, 4), நான்கு மிருகங்களின் தரிசனம் (தானியேல் 7), ஆட்டுக்கடாவும் வெள்ளாடும் பற்றிய தீர்க்கதரிசனம் (தானியேல் 8) ஆகியவை தேவனுடைய இராஜ்ஜியத்தை வெளிப்படுத்தி, கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறிக்கின்றன. இந்த தரிசனங்களும், அவைகளுக்கான தேவனால் அளிக்கப்பட்ட விளக்கங்களும், வெளிப்படுத்தின விசேஷமாகிய வெளிப்படுத்தல் நூலில் காணப்படும் பிற்கால தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.
தானியேல் 9-ஆவது அதிகாரத்தில் உள்ள ஜெபம், பாவமுள்ள ஒரு ஜனத்துக்காக பரிந்துபேசி ஜெபம் செய்யும் மிகத் தெளிவான பாடங்களில் ஒன்றாகும். அதே அதிகாரத்தில், தேவன் தானியேலுக்கு "எழுபது வாரங்கள்" என்ற தீர்க்கதரிசனத்தை அளித்தார்; அது மேசியாவின் வருகையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியது (தானியேல் 9 : 24-27).
தானியேல் எசேக்கியேலுடன் ஒரே காலப்பகுதியில் வாழ்ந்தான்; எசேக்கியேல், தானியேலை நீதிமானும் ஞானமுள்ளவனுமாகப் பெயரிட்டு குறிப்பிடுகிறான் (எசேக்கியேல் 14 : 14, 20; 28 : 3).

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

இதனால், தானியேலின் விசுவாசம் சக அடிமைகளிடத்திலும் அறியப்பட்டிருந்தது என்பதற்கு சான்றாகிறது.பெல்ஷாசார் ராஜாவின் விருந்தின்போது, தானியேல் பாபிலோனின் வீழ்ச்சியையும் கண்ணால் கண்டான். அப்போது தேவனுடைய கை சுவரில் எழுதிய செய்தி: "மேனே, மேனே, தெக்கேல், உப்பார்சின்."
இதன் பொருளை தானியேல் விளக்கியபோது, அது அந்த ராஜ்யத்தின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருந்தது (தானியேல் 5). அதே இரவிலேயே பாபிலோனை மேதியரும் பாரசீகரும் கைப்பற்றினர்.

தானியேலின் மரணத்தைப் பற்றி வேதாகமம் பதிவு செய்யவில்லை. கீரோசு ராஜாவின் மூன்றாம் ஆண்டிலும் தானியேல் இன்னும் ஊழியம் செய்து கொண்டிருந்தான் (தானியேல் 10 : 1); இதனால் அவன் முதிர்ந்த வயதுவரை வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.தைரியம், நேர்மை, ஞானம், தேவனுக்கான உறுதியான பக்தி ஆகியவற்றால் தானியேலின் வாழ்க்கை—சிறப்பாக விளங்குகிறது. மனிதரின் ஆட்சி எப்படியிருந்தாலும்— தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய அதிகாரத்தின் கீழ் நாம் விசுவாசமாக வாழலாம் என்பதை அவன் வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது.■

# மீகா

## (சமூக நீதி பற்றிய தீர்க்கதரிசி)



**காலம்** : கி.மு. 740-687 (சுமார்)
**பணி** : தீர்க்கதரிசி
**இடம்** : யூதா
**புத்தகம்** : மீகா
**கருத்துக்கள்** : நீதி, இரக்கம், உண்மையான பக்தி, நியாயத்தீர்ப்பு & மீட்பு, பெத்லெகேமிலிருந்து வரவிருக்கும் ஆட்சியாளர்

மீகா (அர்த்தம்: "*கர்த்தருக்குச் சமமானவர் யார்?*") யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய ராஜாக்களின் ஆட்சிக்காலங்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். அவனுடைய ஊழியம் ஏசாயாவின் காலத்துடன் ஒத்ததாக இருந்தது; மேலும் எட்டாம் நூற்றாண்டு கி.மு. 8 காலத்திலிருந்த பாவங்களையும் அநியாயங்களையும் கண்டித்த ஓசியா, ஆமோஸ் ஆகியோரின் செய்திகளோடும் ஒற்றுமை கொண்டது.
மீகா யூதாவில் உள்ள கிராமப்புறமான மோரேஷேத் என்ற இடத்திலிருந்து வந்தவன்; தேசத்தின் ஆவிக்குரிய பின்மாற்றத்தைப் பற்றி அவன் வெளிப்படையாகப் பேசினான். அவனுடைய நூல், நியாயத்தீர்ப்பு, வாக்குத்தத்தம், விண்ணப்பம் என்ற மீண்டும் மீண்டும் தோன்றும் அமைப்பை பின்பற்றுகிறது; இதனால் தேவனுடைய பரிசுத்தத்தையும் நிலைத்திருக்கும் இரக்கத்தையும் பிரதிபலிக்கிறது.
ஏழைகளையும் பலவீனர்களையும் பாதித்த பாவங்களை நேரடியாக எதிர்கொண்டதினால், மீகா சமூக நீதியின் தீர்க்கதரிசி என்று நினைவுகூரப்படுகிறான். பாதுகாப்பற்ற குடும்பங்களிடமிருந்து வயல்களையும் வீடுகளையும் அபகரித்தவர்களை அவன் கண்டித்தான் (மீகா 2:1-2). அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி சமத்துவத்தை நிலைநாட்டத் தவறிய தலைவர்களை அவன் கடிந்துகொண்டான் (மீகா 3:9).நியாயாதிபதிகள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் கூட கூலி பெற்றே செயல்பட்டனர் என்பதையும், அது தேவனை அவமதிப்பதாக இருப்பதையும் மீகா வெளிப்படுத்தினான் (மீகா 3:11). அன்றாட வாணிபத்தில் ஜனங்களை ஏமாற்றும் பொய்யான அளவுகளுக்கும் எடைகளுக்கும் எதிராகவும் அவன் பேசினான் (மீகா 6:10-11).
மீகாவின் மூலம், உண்மையான ஆராதனை நீதியுடனும் நேர்மையுடனும் இணைந்திருக்க வேண்டும் என்று கர்த்தர் ஜனங்களை நினைவூட்டினார்.மீகாவின் செய்தி நம்பிக்கையையும் நோக்கிக் காட்டியது. கர்த்தருடைய பலத்தினாலே தேவனுடைய ஜனங்களை மேய்க்கும் ஒரு ஆட்சியாளர் பெத்லெகேமிலிருந்து வருவார் என்று அவன் முன்கூட்டியே அறிவித்தான் (மீகா 5:2-4).
மீகாவின் பிரசங்கம் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது; எரேமியா 26:18-19 இன்படி, அவனுடைய எச்சரிக்கை எசேக்கியா ராஜாவின் இருதயத்தில் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தி, தேசம் மனந்திரும்புவதற்கு உதவியது.
மீகா, தேவன் வேண்டுகிறதை நினைவில் நிற்கும் வார்த்தைகளில் சுருக்கமாகச் சொன்னான்:
"நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல்"
(மீகா 6 : 8) இந்த நூல், தேவனுடைய இரக்கத்தையும் விசுவாசத்தையும் வலுவாக உறுதிப்படுத்தியவாறு முடிகிறது.■

**THE CHURCH OF GOD WORSHIP PLACE:**
**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**
SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி
Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316